***DEPOSITION OF WITNESS***

***(Chapter XXIII Code of Criminal Procedure)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT Mannargudi***

***STC.No. 239/2026 – P.W. 1 (LW-1)***

| | |
|---|---|
| *Name* | கோமதி |
| *Father/Husband's Name* | தர்மராஜ் |
| *Village* | மூன்றாம்சேத்தி |
| *Taluk* | மன்னார்குடி |
| *Religion* | |
| *Age* | 38 |

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 16.03.2026*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் தற்போது மேற்படி முகவரியில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அவர் எனக்கு கொழுந்தனார் மனைவி ஆவார். எனது கணவர் தர்மராஜ் என்பவர் விபத்தில் இறந்துவிட்டார். அவரது வழக்கு மன்னார்குடி நீதிமன்றத்தில் நடந்து வருகிறது. அதுசம்மந்தமாக எனது கொழுந்தனார் பிப்ரவரி மாதம் இந்த வருடம் கடைசியில் தேதி ஞாபகமில்லை. என்னிடம் என் கணவர் வழக்கு சம்மந்தமாக போனில் விசாரித்துக்கொண்டிருந்தார். அதை தவறாக புரிந்துக்கொண்ட ஆஜர் எதிரி என் வீட்டிற்கு வந்து என்னிடம் கோபமாக பேசினார். நான் மறுநாள் காவல் நிலையம் சென்று என்னிடம் ஆஜர் எதிரி கோபமாக பேசியதால் அவரை கண்டித்து விடுமாறு வாய்மொழியாக போலிசாரிடம் சொன்னேன். போலிசார் என்னிடம் வெற்று தாளில் கையொப்பம் வாங்கிக்கொண்டார்கள். அதில் என்ன சங்கதிகள் எழுதியுள்ளார்கள் என்று தெரியாது. நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். (**புகார்** மனுவிலுள்ள **கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலிசார் என்னை விசாரித்தபோது மேற்கூறிய சங்கதிகளை தான் சொன்னேன்.

**(அரசுத்தரப்பில் தன்னுடைய சாட்சி முந்தைய வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளிப்பதால் அவரை, இந்திய சாட்சிய சட்டப்பிரிவு 154 மற்றும் குற்றவியல் நடைமுறை சட்டப்பிரிவு 162ன் கீழ் விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. பரிசீலணைக்கு பின் விசாரணைக்கு அனுமதி வழங்கப்பட்டது).**

<u>அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. எதிரியுடன் சமரசம் செய்துக்கொண்டு மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் - சரிதான். நீதிமன்றத்தில் காட்டப்படும் சமரச மனுவில் நானும் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் - சரிதான். எதிரி எனது கொழுந்தனார் மனைவி என்ற முறையில் சமரசம் செய்துக் கொண்டுள்ளேன் என்றால் - சரிதான். (**சமரச மனுவில் உள்ள எனது கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

2. போலிசார் விசாரணையிலும் வாக்குமூலத்திலும் எனது கணவர் வாகன விபத்தில் சுமார் 11 ஆண்டுகளுக்கு முன்பாக இறந்துவிட்டார் என்றும், அதுதொடர்பாக மன்னார்குடி நீதிமன்றத்தில் வழக்கு நடந்துக்கொண்டிருப்பதாகவும், அதுதொடர்பாக எனது கொழுந்தனார் என்னிடம் வழக்கு சம்மந்தமாக போன் மூலம் விசாரித்துக்கொண்டிருந்தார் என்றும், அதை தவறாக புரிந்துக்கொண்ட ஆஜர் எதிரி கடந்த 26.02.2026 ம் தேதியன்று இரவு சுமார் 8.30 மணியளவில் எனது வீட்டிற்கு வந்து என்னை கொச்சை வார்த்தையால் திட்டியும், என் தலைமுடியை பிடித்து இழுத்து கீழே தள்ளி அடித்தார் என்றும், நான் மறுநாள் காவல் நிலையம் சென்று புகார் மனு கொடுத்தேன் என்றும், உண்மை சம்பவத்தை கூறிவிட்டு தற்சமயம் எதிரி எனது உறவினர் என்ற காரணத்தினாலும், நீதிமன்றத்திற்கு வெளியே சமரசம் ஆகிவிட்டபடிாலும், எதிரிக்கு ஆதரவாகவும், அரசுத்தரப்பிற்கு எதிராகவும், எதிரிகளுக்கு சாதகமாகவும் பிறழ் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் - சரியல்ல.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இல்லை.

(ஒம்/-) ஆ.சீதாலெட்சுமி 16.03.2026

நீதித்துறை நடுவர் எண்.2,

மன்னார்குடி.